OS 128/2024

வா.சா.1 ஆனந்தன் த/பெ கோவிந்தசாமி

நாள் 01.11.2025

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. கடன் வாங்கியதற்கு பொறுப்பிற்காக எழுதப்பட்டது என்றால் இல்லை. கிரையம் வாங்குவதற்காக ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். மீதி கிரையத்தொகை ரூ.10 ஆயிரம் செலுத்துவதற்கு 30 மாதம் அவகாசம் போடப்பட்டது என்றால் சரிதான். 30 மாத காலத்திற்கு ரூ.10 ஆயிரத்தை பிரதிவாதியிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். பிரதிவாதி அவர்கள் வீட்டில் பேசிவிட்டு சொல்வதாக சொன்னார். 30 மாத காலத்திற்குள் பணம் செலுத்துவதற்கு தயாராக இருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். ஒப்பந்தம் போடப்பட்ட தேதி சொல்ல முடியுமா என்றால் 29.12.2020 ஆகும். எந்த தேதியில் பிரதிவாதியிடம் கிரையம் செய்து கொடுக்கும்படி கேட்டேன் என்றால் தேதி நியாபகம் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தேதி சொல்லமுடியுமா என்றால் 2024ம் ஆண்டு 4வது மாதத்தில் அறிவிப்பு அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் எனது தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு 30.04.2024 தேதியிட்டது என்றால் சரிதான்.

2. 30 மாதங்கள் என்பது 21/2 ஆண்டுகள் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பை 30 மாதங்கள் கழித்து அனுப்பினேனா என்றால் இல்லை 30 மாதங்களுக்குள் அனுப்பிவிட்டேன். ஒப்பந்தம் போட்டு 30 மாதம் ஜீன் மாதம் 2023ல் முடிவடைந்து விட்டது என்றால் சாட்சி மேற்கண்ட கேள்விக்கு பதில் அளிக்காமல் அமைதியாக நிற்க்கிறார். வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி பட்டா மாற்றி கொடுப்பதாக சொல்லியிருந்தார் ஆனால் பட்டா மாற்றி கொடுக்காததால் நான் பணம் கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி பட்டா மாற்றம் செய்து தர வேண்டும் என்று வாசகம் உள்ளதா என்றால் இல்லை வாய்மொழியாக பேசப்பட்டது. பிரதிவாதி பெயரில் பட்டா இல்லை என்ற விவரம் எனக்கு முன்னரே தெரியுமா என்றால் தெரியாது. கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு சொத்து சம்மந்தமான வில்லங்கம் நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. சொத்து வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்க்க வேண்டும் என்றால் சரிதான்.

3. பட்டா அவர்கள் பெயரில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்றால் சரிதான். வில்லங்கம் பார்க்காமல் யாரும் சொத்து வாங்க மாட்டார்கள் என்றால் அவசர தேவைக்கு பணம் கேட்டதால் பணம் கொடுத்தேன். பிரதிவாதி என்னிடம் வாங்கிய பணத்தில் சிறுக சிறுக மொத்தமாக 70 ஆயிரம் என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. பிரதிவாதி பணம் கொடுத்ததற்கு சாட்சி இருக்கிறது என்றாலும் நான் பணம் வாங்கிக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்துவிட்டு கடனுறுதிசீட்டு எழுதி கொடுக்காமல் கிரைய ஒப்பந்தமான ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டேன் என்றால் இல்லை. பிரதிவாதி படிக்காதவர் என்பதால் அவரை ஏமாற்றி கடனுறுதிசீட்டுக்கு பதிலாக கிரையம் ஒப்பந்தம் எழுதி இருக்கிறேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டாக தான் பாவிக்க வேண்டும் என்றாலும் காலம் முடிந்துவிட்டது என்றாலும் சரியல்ல. எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.